# பாண்டவருக்குப் போல ஈழத்தமிழருக்கும் தனிநாடு கிடைத்தால் நமக்கும் மகிழ்ச்சியே

### - தமிழக முதல்வர் கருணாநிதி

(சென்னை)

''இலங்கைத் தமிழ் மக்களுக்குத் தமிழ் ஈழம் கிடைத்தால் நாங்கள் மகிழ்ச்சியடைவோம். அவர்கள் விரும்பாத எதையும் அவர்கள்மீது திணிப்பதற்கு நாங்கள் தயாராக இல்லை'' என்று தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி நேற்றுத் தமிழக சட்டசபையில் தெரிவித்தார்.

இலங்கையில் தனித் தமிழ் ஈழப் போராட்டம் பற்றி முதல்வர் தமது பேச்சில் குறிப்பிடுகையில் பாரதப் போரை உதாரணம் காட்டினார்.

''பாண்டவர்கள் சார்பாக கௌரவர்களிடம் தூது சென்ற கண்ணன் முதலில்

(4ஆம் பக்கம் பார்க்க)

Regitered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04

விலை ரூபா: 3-00

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் திசைரி

நாதம் 01 பிரமோதூத ஹூ ஆவணி மீ 08 ஆம் உ. வெள்ளிக்கிழமை (24 - 08 - 1990) ஹிஜ்ரி 1410 ஸபர் 3 ஓசை 187

## நள்ளிரவிலும் தொடரும் விமானத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா விமானப்படையின் ஹெலி ஒன்றும், இரண்டு பொம்மர் விமானங்களும் நேற்று நள்ளிரவிலும் தொடர்ந்து பரா வெளிச்சத்தின் உதவியுடன் நகரைச் சூழவுள்ள பகுதிகளில் குண்டுவீச்சுத்தாக்குதல்களையும், துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டன. இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை.

### ஊர்காவற்றுறை - காரைநகரில்.........

# இராணுவம் - புலிகள் தொடர்ந்தும் சண்டை!

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையில் நேற்று முன்தினம் காலை சிறிலங்கா விமானப்படை ஹெலிகப்ரர்களில் கொண்டுவந்து இறக்கப்பட்ட சிறிலங்கா இராணுவம் விடுதலைப்புலிகளின் பலத்த எதிர்த்தாக்குதலால் இழப்புகளுடன் இப்பொழுது ஊர்காவற்றுறையிலுள்ள பாடசாலைக்கட்டடத்தில் முகாமிட்டுள்ளது. ஊர்காவற்றுறை இறங்குதுறையை அடுத்துள்ள இப்பாடசாலைக் கட்டடத்துக்கு மேலாக விமானப்படை ஹெலிகப்டர்கள்இருபத்திநான்கு மணிநேரமும் பறந்து பாதுகாப்பளித்து வருகின்றன.

இந்த இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிப் போராளிகளுக்குமிடையில் கடும் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் நேற்றைய மோதலில் நான்கு போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்,

இதே சமயம் காரைநகர் கடற்படை முகாமில் இருந்து வெளிவந்த சிறிலங்கா இராணுவத்துக்கும் புலிப்போராளிகளுக்குமிடையிலும் தொடர்ந்து சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## மிதிவெடியில் தப்ப ஒரு சப்பாத்து!

(கொழும்பு)

மிதிவெடியில் சிக்காமல் தப்புவதற்கு புதிய சப்பாத்துக்களை இலங்கை விஞ்ஞானி ஒருவர் கண்டுபிடித்துள்ளார் என ஒரு செய்தி தெரிவித்தது.

தமிழீழ விடுதலைப் புலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சென்னையில் உண்ணாவிரதம்

(சென்னை)

இலங்கையில் வடக்குக் கிழக்குப் பகுதியில் சிறிலங்கா

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தைகைப்பற்றும்வரை போர் ஓயாதாம்

### - ரஞ்சன் சொல்கிறார்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் சண்டையில் அரச படையினர் ஈடுபட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும்வரை போர் தொடர்ந்து நடக்கும் என்றும், சண்டை நிறுத்தத்திற்கு இடமே இல்லை என்றும், சிறிலங்கா பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா நேற்றுக்காலை பத்திரிகையாளர் மகாநாட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு இன்மையாலேயே கப்பல் திரும்பியதாம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு தபால்பொதிகளும், மருந்துகளும், உணவுப் பொருட்களும் ஏற்றிவந்த கப்பல் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தபோது விசர்நாய்கடி மருந்தும், 310தொன் சீனியும் மட்டும் இறக்கப்பட்டது. இதன்பின்னர் கப்பலை உடனடியாக அப்புறப்படுத்தி, கரையிலிருந்து எட்டுமைல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மந்திகைக்கு புதிய பிரஞ்சு டாக்டர் குழு

(மந்திகை)

மந்திகை அரசினர் வைத்திய சாலைக்கு புதிய பிரஞ்சு டாக்டர்கள் கொண்ட குழு ஒன்று அடுத்த வாரம் வரவுள்ளது.

மந்திகை அரசினர்வைத்திய சாலையில் கடந்த சில ஆண்டுகள் சேவை புரிந்து வந்த பிரான்ஸ் வைத்தியக்குழுவை உடனடியாக கொழும்பிலுள்ள தலைமையகத்துக்கு வருமாறு அழைப்பு வந்ததையடுத்து அக்குழு கடந்த 22ஆம் திகதியன்று தமது சேவையை இடை

(4ஆம் பக்கம் பார்க்க)

## உயிருடன் மூவர் எரிப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் தரையிறங்கிய இராணுவம் அங்கு கைது செய்த மூன்று தமிழர்களை உயிருடன் தீயிட்டுக் கொளுத்தியுள்ளது.

## புலிக்கொடியை இறக்க முயன்ற 4 படையினர் பலி

(மாங்குளம்)

மாங்குளத்தில் இராணுவ முகாமிற்கு பின்பக்கத்தில் இருந்த பிள்ளையார் கோவிலில் விடுதலைப் புலிகளால் ஏற்றப்பட்ட புலிகொடியை அகற்றுவதற்கு முனைந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

இச் சம்பவம் நேற்று முன்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அரசபடைகளின் தாக்குதலால் குடாநாட்டில் 12 பேருக்கு மேல் பலி

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா இராணுவம் ஊரடங்கைவானில்இருந்துஅமுலாக்கிய 2வது தினமானநேற்றும் குடாநாடடின் பலபகுதிகளிலும் அதிகாலையிலிருந்து மாலைவரை பரவலான விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. இத்தாக்குதல்களில் 12 பேருக்கு மேல் கொல்லப்பட்டதாகவும் 50ற்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றைய தினமும் குடாநாட்டில் அலுவலகங்களும், பெருமளவு வர்த்தக ஸ்தாபனங்களும் மூடிக் கிடந்தன. வீதிகளில் வாகன ஓட்டம் இல்லாதிருந்ததுடன், மக்கள் நடமாட்டமும் வெகு குறைவாகவே இருந்ததைக் காணமுடிந்தது.

இருந்தபோதும் விமானத் தாக்குதல்களினால் பொது மக்கள்கொல்லப்பட்டுள்ளனர் மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

தென்மராட்சியிலும் நேற்று ஸ்ரீலங்கா விமானப்படைவிமானங்களும், ஹெலிகொப்ரர்களும் பரவலாகத் தாக்குதலை மேற்கொண்டன.

சாவகச்சேரி நகரம், இயக்கச்சி, பளை, கொடிகாமம், கைதடி, சரசாலை, மீசாலை, எழுதுமட்டுவாள், மிருசுவில் ஆகிய பகுதிகளில் தாக்குதல்கள் இடம்பெற்றன.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீர வணக்கங்கள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் இரண்டாவது நாளாக நடைபெற்ற சண்டையில் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த பிரதீஷ் (விரோந்திரன் வந்தாறுமூலை செங்கலடி), விக்னா (சித்தவேலு சசிதரன் கந்தளாய்) பாபுஜி (ஐயாத்துரை அருட்செல்வன் சந்தை வீதி, காங்கேசன்துறை), 2வது லெப்டினட் சின்ன அல்பேட்,

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா அரசுடன் இந்திய அரசு தமிழர்பிரச்சினையில் தொடர்பு

(புதுடில்லி)

இலங்கைத்தமிழர் பிரச்சினை சம்பந்தமாக இந்திய மத்திய வெளியுறவு அதிகாரிகள் மூலம் சிறிலங்கா அரசுடன் மத்திய அரசு தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது என்று இந்தியப் பிரதமர் வி. பி. சிங் நேற்றுத் தம்மைச் சந்தித்த தமிழ்நாடு தூதுக்குழுவிடம்தெரிவித்தார்

(4ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் பேசும் மக்களைப் பாதுகாக்கும் படையாக புலிகள் வளர்ந்துள்ளார்கள்

**- பரமமூர்த்தி**

(வவுனியா)

''இன்றைய நிலையில் தமிழ்ப் பேசும் மக்களைப் பாதுகாக்கும் பெரும் படையாக நாம் வளர்ச்சி அடைந்து விட்டோம். எமது எதிரி, கடைசி நிலையில் நின்று ஆகாயமார்க்கமான தாக்குதலை நடாத்திக் கொண்டிருக்கின்றான். எமது விடுதலையைப் பெறுவதற்கு நாம் கொஞ்சத் தூரம் தான செல்ல வேண்டியுள்ளது எதிரியின் இந்தக் கடைசி நிலையில் நாம் பல கஷ்டங்களையும், துன்பங்களையும் அனுபவிக்கப் பழகிக் கொண்டால் மிக விரைவில் விடுதலை கிடைத்து விடும்''

இவ்வாறு, கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை காக்கையன் குளம் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் முஸ்லிம் மக்கள் மத்தியில் பேசும் போது, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரசியல் அமைப்பாளர் திரு.பரமமூர்த்தி குறிப்பிட்டார்

அங்கு அவர் தொடர்ந்து பேசும் போது, எமது தமிழீழப் போராட்டத்திற்கு யார் துரோகம் செய்திருக்கிறார்கள் என்று நாம் பார்க்கிறோமே தவிர, சாதி, மதங்களை நாம் பார்த்து எவரையும் தாக்குவதில்லை. இதை தமிழ்ப் பேசும் மக்கள் உணர வேண்டும்.

தமிழ் மக்களிடமிருந்து முஸ்லிம் மக்களைப் பிரித்து வைப்பதற்கு அரசும், அதனுடன் இணைந்து செயற்படும் சில குழுக்களும் திட்டமிட்டுள்ளன.

சகல இனங்களிலும், சில பேர், தம் சொந்த இனத்தைக் காட்டிக் கொடுப்பதற்காக அரசுடன் இணைந்தே செயற்பட்டு வந்துள்ளனர்.

தற்போது முஸ்லிம் மக்களைக்காப்பாற்றுவதாகக் கூறிக் கொள்ளும் அரசும், தமிழ் மக்களை அழிக்கும் காலம் முடிந்தவுடன் முஸ்லிம் மக்கள்மீது கை வைப்பது உறுதி. விடுதலைப் புலிகள் சொன்னார்கள் என்று இதை இப்போதே குறித்து வையுங்கள்.

எதிரி, எம்மை அடக்கப் பார்க்கிறான். முடியா விட்டால் அழிக்கும் முயற்சியில் இறங்கி விடுகிறான்.

காலா காலமாக தமிழ்மக்களும் முஸ்லிம் மக்களும் இணைந்தே வாழ்ந்து வருகிறார்கள். தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பிழையான செய்திகள், பிழையான கருத்துகள், பிழையானவர்களால் பரப்பப்பட்டு வருகின்றன.

தமிழ், முஸ்லிம் மக்களின் படை தான் விடுதலைப் புலிகள். இப்போது படை அமைத்து விட்டோம். இனி அடுத்த நடவடிக்கை அரசு அமைப்பது தான்.

தமிழ்ப் பேசும் மக்களை ஏமாற்றிய ஸ்ரீலங்கா அரசு, விடுதலைப் புலிகளை ஏமாற்ற முயற்சி எடுத்தது. அரசின் இந்த நடவடிக்கையை நாம் முறியடித்து வெற்றி பெற்று விட்டோம்.

உலகிலேயே ஆயுதம் தாங்கிய நிலையில் அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்ட கட்சி எமது கட்சி மட்டும் தான்.

அண்மையில் அரச படையினருக்கும் எமக்குமிடையே ஏற்பட்ட யுத்தத்தில் எம்மால் ஏழு இராணுவ முகாம்கள் தரை மட்டமாக்கப்பட்டன. இருபத்தைந்து பொலிஸ்நிலையங்கள் கைப்பற்றப் பட்டு, அவற்றுள் இருந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டன. பல இராணுவ முகாம்களில் ஹெலிகப்டர்களை இறங்கவிடாது தடுத்து வைத்துள்ளோம்.

எமது பலம் அதிகரித்துக் கொண்டு செல்லும் இந்த நிலையில், கொழும்பு, இந்தியா, வெளிநாடுகள் என்று இடம் பெயர்ந்து செல்பவர்கள் அனைவரும் எமது மண்ணுக்குத் துரோகம் செய்கிறார்கள் என்றே கூற வேண்டும். (தி)


## வரிவிளம்பரம்

### அடையாள அட்டை கவரிடுதல்

அடையாள அட்டைகளை கவரிடுவதற்கும், றோணியோ பிரதிகளைப்பெற்றுக் கொள்ளவும்: கிளீன் கட், 37, சிவகுருநாதர் வீதி, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் (இந்து மகளிர் கல்லூரிச் சந்திக்கும், நீராவியடி பிள்ளையார்கோயிலுக்கும் இடையில்) (B/1347)


# வவுனியா களஞ்சியத்திலும் உணவு கையிருப்பு இல்லை

(வவுனியா)

வவுனியா அரசாங்க உணவுக் களஞ்சிய அறையில், விநியோகத்திற்கு என்று சேகரித்து வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருட்கள் முடிந்து விட்டன என்று தெரிவிக்கப் பட்டது.

மேற்படி களஞ்சிய அறையிலிருக்கும் உணவுப் பொருட்கள் வவுனியா மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வந்தன.

கடந்த ஜூன் மாதத்தின் பின்னர் இக் களஞ்சிய அறையில் எந்தவிதமான உணவுப் பொருட்களும் கொண்டுவந்து சேர்ப்பிக்கப்படவில்லை.

ஜூன் மாதம் 13ஆம் திகதி வவுனியாவில் விடுதலைப் புலிகளுக்கும், அரச படையினருக்குமிடையே யுத்தம் மூண்ட சமயத்தில், வவுனியா மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு விநியோகிப்பதற்கு இரு மாதங்களுக்கு போதுமானளவு உணவுப் பொருட்கள் இக் களஞ்சிய அறையில் காணப் பட்டன.

தற்போது இக்களஞ்சிய அறையில் உணவுப் பொருட்கள் முடிவடைந்ததை அடுத்து, வவுனியா கூட்டுறவுக் கிளைகளுக்கான உணவுப் பொருட்களை அநுராதபுரத்தில் உள்ள சாலியாபுர களஞ்சிய அறையிலிருந்துதான் ஏற்றிவர வேண்டும் என்று கூட்டுறவுச் சங்க அதிகாரி ஒருவர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார். (தி)

## வைத்தியசாலைகளில் மருந்து இல்லை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள பொதுவைத்தியசாலைகளில் மருந்துப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதன் காரணமாக சிறிய நோய்களுக்குக்கூட சிகிச்சை செய்யமுடியாத நிலையில் மக்கள் தவிக்கின்றனர்.

ஓமந்தை வைத்தியசாலை மருந்துப் பொருள் அறவே அற்ற காரணத்தினாலும், வானத்தாக்குதல்நடவடிக்கை காரணமாகவும் மூடப்பட்டு விட்டது.

வவுனியா அரச வைத்தியசாலை இயங்க வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்கான எதுவித நடவடிக்கையும் அரசால் மேற்கொள்ளப்படவில்லை. (தி)

## முறிப்பில் அகதிமுகாம்

(கிளிநொச்சி)

முறிப்பு தென் இந்திய திருச்சபைக் காணியில் கிளிநொச்சியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்காக அகதி முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள பல்வேறு ஆலயங்கள், பாடசாலைகளில் அகதிகளாக இருந்த மக்களுக்கே இவ்வகதி முகாம் அமைக்கப்பட்டு, இவ்வகதிகளுக்கு உணவு, மருந்து, இருப்பிட வசதிகள் அளிக்கப் படுகின்றன. (49)


## நினைவு அஞ்சலி

தாயின் அணைப்பிலே 19-11-1975



தீயின் அணைப்பிலே 30-06-1990

## மரணித்த மறப்புலி ''பேபி''
## (செல்லயா அகிலநாதன்)

காங்கேசன்துறை

திதி: அத்தம் - 24-08-1990

உருக்கிலே வார்த்தநின்
உள்ளமும் விடுதலை
நெருப்பிலே கனிந்தநின்
விழிகளும் எரிமலைக்
கொதிப்பிலே கிளம்பிடும்
கொள்கையும் கூற்றுவன்
கொதிப்பிலே கிளம்பிடும்
கொள்கையும் வீரமும்
சிதைக்குள்ளே கரிந்து
நீறாகவே போனதேனோ?
தீயினைக் கண்களிலே
ஏந்தியும் நேர்ப்படும்
திக்கினைச் சாடநற்
தோளிணை தூக்கியும்
பாய்புலிப் படையிலே
சென்றனை வீரனாய்ச்
சாய்ந்தனை நெஞ்சிலே
சுடர்ந்துநீ வாழ்கவே !

சிவன் வீதி,
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

அப்பா, அம்மா,
அண்ணா, தம்பி,
(B, 1349)


# மாவீரர் தின கலை கலாசாரப் போட்டிகளுக்கானவிதிமுறைகள்

- ★ தமிழீழ மக்கள் எவரும் கலந்து கொள்ளலாம்.
- ★ படைப்புக்கள் யாவும் தமிழீழ விடுதலைப் போரை அடிப்படையாகக் கொண்டு அதனை முன்னெடுத்துச் செல்லும் கருத்துக்கள் செறிந்ததாகவும், சமகால எமது மண்ணினது மக்களதும் பிரச்சினைகளை அடிநாதமாகக் கொண்ட யதார்த்தத் தன்மை மிக்கதாகவும் இருத்தல் அவசியம். மண்மீட்புப் போரில் இன்னுயிர் ஈந்த வீரவேங்கைகளினதும், வீராங்கனைகளினதும உணர்வுகளையும், இதயதாகத்தையும் பிரதிபலித்தல் வேண்டும்.
- ★ சுவரொட்டிக்கான கருப்பொருள்களும் மேற்குறிப்பிட்ட தன்மை மிக்கதாகவே இருத்தல் வேண்டும்.
- ★ இலக்கியப் படைப்புக்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டதாக அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- ★ ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்புதல் வேண்டும்.
- ★ சிறுகதைகள் 10 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் நாவல்கள் 100 பக்கங்களுக்குக் குறையாததாகவும் இருத்தல் வேண்டும்.
- ★ கவிதைகள் 60 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- ★ சுவரொட்டிகள் யாவும் 'ஆர்ட்போட்'டில் 60cm x 40cm அளவு கொண்டதாக வண்ணப்படங்களாகவோ (எந்த வண்ணமும் உபயோகப்படுத்தலாம்) கறுப்பு வெள்ளைப் படங்களாகவோ வரைந்து அனுப்பலாம்.
- ★ போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களது படைப்புக்கள் அவர்களது பாடசாலை அதிபர் அல்லது வகுப்பாசிரியர் ஆகியோர் மூலம் அவர்களது சொந்தப் படைப்புத்தான் என்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- ★ போட்டிக்கான கட்டுரைகள் 3000 - 5000 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் நல்லது.
- ★ போட்டிகளுக்கான படைப்புகள் அனுப்பப்பட வேண்டிய இறுதித் திகதி 15 . 10 . 1990.
  அனைத்து ஆக்கங்களும் ''ஈழநாதம்'' அலுவலகத்திற்கே குறிப்பிட்ட திகதிக்கு முன் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
- ★ தகுதி வாய்ந்த நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியாகும்.

## மாணவர்க்கான போட்டிகள் பற்றிய சிறப்பு விதிகள்

- ★ மாணவர்க்கான போட்டிகள் பின்வரும் விடயங்களில் நடைபெறும்.
  1) சிறுகதை 2) கவிதை 3) கட்டுரை 4) ஓவியம்
- ★ சிறுகதை, கவிதை, ஓவியம் ஆகியன முன்னர் மேலே குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
- ★ ஓவியங்கள் 18'' x 12'' அளவு கொண்டதாக இருத்தல் வேண்டும்.
- ★ கட்டுரைகள் கீழ்வரும் அம்சங்களைக் கொண்டதாகவும் 2500 சொற்களுக்கு மேற்படாததாகவும் அமைதல் வேண்டும்.
  1) விடுதலைப் போராட்டமும் மாணவர் பங்களிப்பும்.
  2) தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தி
  3) தமிழீழ மாணவர்களது கல்வியின் எதிர்காலம்.
  4) இன்றைய சூழ்நிலையில் மாணவர்களின் சமூகப்பணிகள்.
  5) ''போராடுவதற்காக கற்போம்''
- ★ மாணவர்களுக்கான போட்டிகள்யாவும் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பகுதிகளாக நடாத்தப் படும்.
  15 வயதிற்குட்பட்டோர் கீழ்ப்பிரிவு
  15 — 17 வயதிற்கிடைப்பட்டோர் மத்தியபிரிவு
  17 வயதிற்கு மேற்பட்டோர் மேற்பிரிவு
- ★ ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியாக பரிசுகள் வழங்கப் படும்.

### சிந்தனைக்கு

வினை விதைத்தவன் வினை அறுப்பான்

- தமிழ்ப் பழமொழி


# ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 24-08-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


## துண்டும் குண்டும்

வானத்திலிருந்து குண்டுகள் மட்டுமல்ல துண்டுகளும் இப்போது யாழ். குடாநாட்டில் சிறிலங்கா விமானப்படை வீசி வருகின்றது. ஆனால் குண்டுகள் குடிமக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் தப்பாமல் விழுவது போல துண்டுகள் விழுவதில்லை. பெரும்பாலும் துண்டுகள் கடலுக்கே போய்ச் சேருகின்றன.

வானிலிருந்தே யாழ். குடாநாட்டில் - மன்னிக்கவும் குடாநாட்டில் என்று சொல்வதற்குப் பதிலாக துண்டுகள் எங்கே விழுகின்றனவோ அங்கெல்லாம் ஊரடங்கு உத்தரவை சிறிலங்கா அரசு பிறப்பித்திருக்கிறது.

ஊரடங்கு உத்தரவு பற்றித் தெரியாதோர் அல்லது தெரிந்தும் தரையில் பொலிஸ், இராணுவ நடமாட்டம் இல்லாததால் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்காகத் தேடிச் செல்லும் மக்கள் மீது வானிலிருந்தே துப்பாக்கிச் சூடும் குண்டு வீச்சும் வரும்.

ஊரடங்கு அமுல் செய்யப்பட்ட பின்னர்தான் யாழ் குடாநாட்டில் குண்டு வீச்சும் ஹெலிச் சூடும் ஷெல் அடியும் பீரங்கித் தாக்குதலும் நடைபெறத் தொடங்கியிருப்பதாக யாரும் நினைத்துவிடக் கூடாது.

யாழ். குடாநாட்டில் இரவு பகல் என்ற வேறுபாடில்லாமல் எந்தச் சமயத்திலும் எந்த இடத்திலும் போர் விமானங்கள் குண்டு வீசுவதும், ஹெலியிலிருந்து துப்பாக்கிச் சூடும் அதேசமயம் குண்டு வீச்சும் குண்டு வீச்சு விமானங்கள் குண்டு வீசுவது மட்டுமல்ல துப்பாக்கிப் பிரயோகம் செய்வதும் முகாம்களிலிருந்து ஷெல் அடிப்பதும் சர்வசாதாரண நிகழ்ச்சிகள்.

இப்பொழுது ஊரடங்கு உத்தரவு வானிலிருந்து பிறப்பிக்கப்பட்டிருப்பதால் இருபத்திநான்கு மணிநேரமும் குடிமக்கள் வாழும் பகுதிகள் மீது வானிலிருந்து தாக்குதல் நடத்தி இன ஒழிப்பைத் துரிதப்படுத்துவதே அரசின் திட்டமாக இருக்க வேண்டும்.

கடைசிப்புலியை ஒழிக்கும்வரை போர் ஓயாது என்று சிறிலங்கா ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவும் புலிகளை அழித்தே தீருவேன் என்று சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவும் சூளுரைத்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகளை மக்களிடமிருந்து தனியாகப் பிரிக்கமுடியாது என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். இந்நிலையில் கடைசிப் புலியையும் ஒழிப்பதென்பது இன ஒழிப்பைத்தான் குறிக்கும்.

ஓர் இனத்தை ஒழித்துக்கட்டுவதென்பது சுலபமல்ல. இதன் விளைவு எதிர்காலத்தில் இலங்கையில் படுபயங்கரமானதாக இருக்குமென்று எதிர்பார்க்கலாம்.

இலங்கையில் இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே வழி என்று கூறிய சிறிலங்காவின் முன்னாள் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவருமான திருமதி சிறிமா பண்டாரநாயக்கா இப்பொழுது நிலைமையை உணர்ந்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டியது அவசியம் என்று கூறியிருக்கிறார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண்பதற்கு ஆளும் யு. என். பியும் எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் சேர்ந்து முயற்சிசெய்யவேண்டுமென்றும் கூறியிருந்தார்.

இராணுவ நடவடிக்கையாலும் சிறுபான்மைச் சமூகங்களை ஒன்றுடன் ஒன்று மோதி அழித்துக் கொள்ளச் செய்வதாலும் தமது அழிப்புத்திட்டத்தில் வெற்றி பெற்றுவிடலாமென சிறிலங்கா சிங்கள பௌத்த பேரினவாதிகள் நினைத்தால் விளைவு மோசமானதாகவே முடிந்துவிடலாம்.

எனவே அழிப்புச் சிந்தனையைக் கைவிட்டு இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வுகாண சிறிலங்கா அரசு முன்வருவதே விவேகமாகும்.

# வளைகுடா பிரச்சினையில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கும் - ஐ. கே. குஜ்ரால்

(புதுடில்லி)

வளைகுடாப்பிரச்சினையில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கும் என்று இநதிய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் தெரிவித்தார்.

சோவியத் யூனியன், அமெரிக்கா ஜோர்டான், ஈராக், குவைத் ஆகிய ஐந்து நாடுகளுக்கு விஜயம் செய்து விட்டு அமைச்சர் குஜ்ரால் நேற்று முன் தினம் இரவு டில்லி திரும்பினார்.

ஈராக் குவைத் இணைப்பைத் தொடர்ந்து வளைகுடாவில் பிரச்சினை ஏற்பட்டபின் மத்திய கிழக்குநாடுகளுக்கு விஜயம் செய்த முதல் வெளிநாட்டு அமைச்சர் குஜ்ரால்தான்.

குவைத்திலும் ஈராக்கிலும் தங்கியுள்ள இந்தியர்களை இந்தியாவுக்குத் திரும்ப அழைத்துவருவதில் ஈராக் தலைவர்களுடன் குஜ்ரால் உடன்பாடு கண்டுள்ளார். குவைத்திலிருந்து டில்லி திரும்பிய குஜ்ரால் தம்முடன் பெண்கள், குழந்தைகள், நோயாளிகள் என இருநூறு இந்தியர்களை அழைத்து வந்தார்.

இதற்கிடையில் ஈராக்கிய விமான நிலையமான பஹ்ராவில் இருந்தே குவைத்திலுள்ள இந்தியர்களை இந்தியாவிற்கு திருப்பி அனுப்புவதற்கு ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் இணங்கியுள்ளார்.

குவைத்தில் இந்திய தூதரகத்தை மூடுவது பற்றியும், எண்ணை விநியோகம் குறித்தும் பாராளுமன்றத்தில் அறிக்கை வெளியிடப் போவதாக குஜ்ரால் தெரிவித்தார்.

குவைத்தில் இருக்கும் எல்லா வெளிநாட்டு தூதுவராலயங்களையும் இன்றுடன் மூடும்படி ஈராக் வேண்டுகோள் விடுத்திருந்தது தெரிந்ததே.

## ஜோர்டான் எல்லையை மூடியது

(அம்மான்)

குவைத்தில் இருந்தும், ஈராக்கில் இருந்தும் வரும் அகதிகளின் வரவைத் தடுப்பதற்காக ஜோர்டான் ஈராக் குடனான தனது எல்லையை மூடியுள்ளது.

## கராச்சியில் சூட்டிற்கு 22 பேர் பலி

(கராச்சி)

பாகிஸ்தானில், கராச்சியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருபத்தியிரண்டு மொகஜிர் இனத்தவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் கராச்சியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக இதுவரை கொலையாளிகள் எவரையும் கண்டு பிடிக்கவில்லை என்று பாகிஸ்தானிய பொலிசார் தெரிவித்தனர்.

## இந்தியாவில் தொடர்ந்து வெள்ள நிலைமைகள்

(ஆந்திரா)

ஆந்திரா உத்திரப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் தொடர்ச்சியான வெள்ளநிலைமைகளால் பாரிய அழிவுகள் ஏற்பட்டுள்ளன.

கங்கை, ஆக்கிரா ஆகிய நதிகள் அபாய மட்டத்துக்கு மேலாக பெருக்கெடுத்து பாய்வதால் பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளதுடன் அங்கிருந்து ஏறக்குறைய எழுபத்தெட்டாயிரம் மக்கள் பாதுகாப்பின் நிமித்தம் வெளியேற்றப்பட்டுள்ளார்கள்.

கடுமையான மழையும் பெய்து வருவதால் வீடுகள் இடிந்து விழுந்து, மண்சரிவு ஆகியவற்றால் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளார்கள். பயிர்களுக்கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## இரண்டாம் கட்ட நிவாரணம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணமாவட்ட அகதிகளுக்கு இரண்டாம் கட்ட உணவாக 325 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் வழங்கப்பட உள்ளன.

இவர்களுக்கு முதற்கட்ட உணவுப்பொருட்கள் ஆகக் கூடுதலாக 200 ரூபாவுக்கே வழங்கப்பட்டது. (24)

## இலவச மூக்குக்கண்ணாடி

(வட்டுக்கோட்டை)

கண்பார்வை குறைந்தவர்களுக்கான கண் பரிசோதனை செய்யப்பட்டு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் வைபவம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் சார்பில் சித்தங்கேணியிலுள்ள லயன்ஸ் கழக தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

அகதிமுகாம்களில் தங்கி இருப்போர் அதற்கான அத்தாட்சியுடன் வருவார்களாயின் முன்னுரிமை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தட்டுப்பாடு

(ஈச்சமோட்டை)

யாழ் மாவட்ட கால்நடை வளர்ப்போர் பணிமனையில் கால் நடைகளுக்கான சினைப் படுத்தும் மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

(43)

## அகதிகளுக்கு உதவி

ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக் கழகமும் கோண்டாவில் வாழ் மக்களிடம் இருந்து 19484/ரூபா பெறுமதியான உணவுப்பொருட்களைச் சேகரித்து இடம் பெயர்ந்துள்ள அகதிகளிடம் ஒப்படைப்பதற்காக விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் புனர்வாழ்வுப் பிரிவிடம் கொடுத்துள்ளார்கள்.

## வவுனியாவில் அகதிகளுக்கு உணவு கிடைக்கவில்லை

(வவுனியா)

வவுனியா தெற்கு தமிழ், உதவி அரசாங்க அதிபர் பிரிவு கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்கு இரு தடவைகள் அகதி நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் முழு அகதி மக்களுக்கும் அகதி நிவாரணம் வழங்கப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகிறது.

இரு தடவைகள் பதினைந்து லொறிகளில் கொண்டு வரப்பட்ட உணவுப் பொருட்களில், அரிசியும் மாவும் இடம் பெற்றிருந்தன.

மேற்படி அகதி நிவாரணப் பொருட்கள் வழங்கப்படாத அகதி மக்களுக்கு மீண்டும் நிவாரணப் பொருட்கள் கொண்டுவரப்பட்டு வழங்கப்பட உள்ளன என்று இதோடு சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (தி)

## எரிபொருள் தடையில் இராணுவம் தீவிரம்

(வவுனியா)

வவுனியாவின் நகரப் பகுதியிலிருந்து கிராமங்களை நோக்கி வரும் வாகனங்களின் எரிபொருட்களின் அளவை இராணுவத்தினர் சோதனை செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

வவுனியா குளப்பகுதி வழியாக, கிராமங்களை நோக்கி வரும் வாகனங்களின் எரிபொருட்களின் அளவையே காவல் அரண்களில் உள்ள இராணுவத்தினர் சோதனை செய்கின்றனர்.

லொறிகள் மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள வாகனங்களுமே இவ்வாறு சோதனை இடப்படுகிறது.

குறிப்பிட்ட தூரத்திற்கு செல்ல வேண்டிய வாகனங்களில், அத்தூரத்திற்கு தேவையான எரிபொருட்கள் மட்டுமே நிறைந்திருக்க வேண்டும் என்று இராணுவத்தினர் கட்டளையிட்டுள்ளனர்.

மேலதிகமான எரிபொருட்கள் இருப்பின் அவை, விடுதலைப் புலிகளுக்குச் செல்லலாம் என்று இராணுவத்தினர் அபிப்பிராயப்படுகின்றனராம் ஆனாலும் 'கைலஞ்சம்' பெற்றுக் கொண்டு, சில வாகனங்களை இராணுவத்தினர் அனுப்பி வைக்கின்றனராம்.

இவ்வாறு வரும் வாகனங்களில் உள்ள சில முக்கியமான பொருட்களை இராணுவத்தினர் அபகரித்துக் கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (தி)

## வவுனியாவில் இருந்து மக்கள் வெளியேற்றம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள தமிழ் மக்களில். அரைவாசிக்கு மேற்பட்ட மக்கள், மடுக்கோயிலுக்கும், தமிழகத்திற்கும் சென்றுவிட்டனர்.

முஸ்லிம் மக்களில் ஆயிரக் கணக்கானவர்கள் சிங்களப் பகுதிகளுக்குச் சென்று விட்டனர்.

இராணுவத்தினரின் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு அஞ்சி அகதிகளாக மேற்படி இடங்களுக்குச் சென்ற மக்களில் இந்திய வம்சாவளித் தமிழர்களே அதிகம் என்று தெரிவிக்கப் பட்டது.

வவுனியா நகரப்பகுதியில் மட்டுமே இராணுவத்தினரின் நடமாட்டம் உள்ள போதிலும் விமானத் தாக்குதல்களுக்கு அஞ்சியே இவர்கள் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டது. (தி)

# இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு தலையிட தமிழ்நாடு அரசு கோரிக்கை

## சட்டசபையில் கருணாநிதி தீர்மானம் நிறைவேற்றம்

(சென்னை)

இலங்கை அரசும் இலங்கைத் தமிழ்ப் போராளிகளும் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பேச்சுவார்த்தைகள் நடைபெறும்சமயத்தில் வெளிநாடுகளிலிருந்து இலங்கை ஆயுத உதவி பெறாமலிருப்பதற்கு மத்திய அரசு உத்தரவாதம் பெறவேண்டுமென்றும் இந்திய மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று நேற்று தமிழக சட்டசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பெற்றது. இத்தீர்மானத்தை முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியே கொண்டுவந்தார்.

தமிழகச் சட்டசபையின் கூட்டம் நேற்றுக்காலை சபாநாயகர் தமிழ்க்குடிமகன் தலைமையில் கூடியபோது இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிய முக்கிய தீர்மானமொன்று கொண்டுவரப்பட்டது.

இலங்கை அரசும் இலங்கைப் போராளிகளும் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காண்பதற்கு இந்திய மத்திய அரசு உதவ வேண்டுமென்ற அரசுத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது சட்டசபையே மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது.

இலங்கை அரசின் இராணுவத் தாக்குதலால் நாள்தோறும் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்படுகிறார்கள் என்றும் தங்கள் உடமைகளை இழந்து பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் அகதிகளாகத் தமிழகத்துக்கு வந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் அத்தீர்மானத்தில் முதல்வர் கருணாநிதி குறிப்பிட்டிருக்கிறார்.

இவ்வாறு மனித உரிமைகள் மீறப்படுவதையும் இலங்கை அகதிகளின் வருகையால் இந்திய மண்ணில் ஒருவகையான ஆக்கிரமிப்பு நடவடிக்கையை இலங்கை அரசு மேற்கொண்டு வருவதையும் சகித்துக்கொண்டிருக்க முடியாதென்றும் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கண்டு இலங்கைத் தமிழர்கள் நிம்மதியாகச் சுதந்திரமாக வாழ்வதற்கும் இங்கு தமிழ்நாட்டில் அகதிகளாக வந்திருக்கும் தமிழர்கள் அச்சமின்றித் திரும்பிச் சென்று நிம்மதியாக வாழ்வதற்கும் உரிய சூழ்நிலையை உருவாக்க உடனடியாக இந்திய அரசு முன்வரவேண்டும் என்று இந்தியமத்திய அரசைக் கேட்டுக்கொள்ளும் இந்தத் தீர்மானம் தமிழ்நாடு சட்டசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளித்து முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி பேசுகையில் இலங்கையில் இருதரப்பும் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்றும் பேச்சுவார்த்தை சுமுகமாக நல்லமுறையில் நடைபெற இந்தியஅரசு உதவ வேண்டுமென்றும்கூறினார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றி விரிவாக எடுத்துக் கூறிய முதல்வர் கருணாநிதி கடந்த ஆண்டு மார்ச் மாதம் இருபத்தைந்தாம் தேதி சட்டசபையில் நடந்த ஒரு நிகழ்ச்சி பற்றி குறிப்பிட்டு அப்போது ஏற்பட்ட ஒரு குழப்பத்தினால் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ராஜீவ்காந்தியால் தீர்வுகாண முடியாமல் போய்விட்டது என்று கூறினார். இந்த நிகழ்ச்சி இலங்கைத் தமிழர் தலைவிதியை மாற்றி விட்டது என்று முதல்வர் சொன்னார். அந்தச் சம்பவத்தினால் ஏற்பட்ட கசப்பு உணர்வினால் ராஜீவ்காந்தி பேசாமல்இருந்துவிட்டாரென்றும் அப்படியொரு சம்பவம் ஏற்படாமலிருந்திருந்தால் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காணப்பட்டிருக்கும் என்றும முதல்வர் கூறினார்.

### பாண்டவருக்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து நாடுகள் கேட்டார், கிடைக்கவில்லை. ஐந்து ஊர்கள் கேட்டார்; அதுவும் கிடைக்கவில்லை. கடைசியாக ஐந்து வீடுகள் கேட்டார்; அதுவும் கிடைக்கவில்லை. ஆனால் வீடு கிடைக்காத காரணத்தால் நாடு கிடைத்தது. இதுபோல ஈழத் தமிழர்களுக்கும் நாடு கிடைத்தால் எமக்கு மகிழ்ச்சிதான்'' என்று முதல்வர் கருணாநிதி கூறியபோது சட்டசபை கலகலத்தது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு இருதரப்பும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு இந்திய மத்திய அரசு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசுகையிலேயே முதல்வர் மேற் கண்ட பாரதக் கதையை எடுத்துச் சொன்னார்.

**''தமிழீழம் என்றால் அதுவே எமது முடிவும்''**

இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக தமிழ் நாடு சட்டசபையில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் இரா. மோகன் பேசுகையில் ஈழத் தமிழ்ப் போராளிகளுக்கிடையே பிரிவினை ஏற்படுத்தியது ராஜீவ் காந்தியே என்றும் வரதராஜப் பெருமாள் தலைமையில் இலங்கையில் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் ஒரு பொம்மை அரசை அவர் உருவாக்கினார் என்றும் குற்றம் சாட்டினார்.

''இலங்கையில் வசிக்கும் தமிழர்கள் தமிழ் ஈழம் கேட்பார்களேயானால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முடிவும் அதுவேயாகும், என்றும் இரா. மோகன் கூறினார்.

### மிதிவெடியில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களினால் புதைக்கப்படும் மிதிவெடிகளிடம் இருந்து இராணுவத்தை பாதுகாக்க இது கண்டுபிடிக்கப்பட்டதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் செய்தி அறிக்கை தெரிவித்தது.

இதுவரை இம் மிதிவெடியினால் ராணுவத்தினர் பலர் இறந்துள்ளனர். பலர் கால்களை இழந்துள்ளனர்.

### யாழ்ப்பாணத்தை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டில் தெரிவித்தார்.

மேலும் கருத்து வெளியிடுகையில் பாதுகாப்புப் படையினர்விரும்பும்வரையில்யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு தொடரும் எனவும் தெரிவித்தார்.

ஊர் காவற்றுறையிலிருந்து விடுதலைப் புலிகள் வெளியேற்றப்பட்டு விட்டதாகவும், மண்டைதீவில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து வெளியிடுகையில் யாழ். வைத்தியசாலையை இயக்க அரசாங்கம் விருப்பம் கொண்டுள்ளது ஆனால் வைத்தியர்கள்தான் அங்கு நிலவும் சீரற்ற நிலையில் சேவை செய்ய முன்வரவில்லை எனவும் தெரிவித்தார்.

ஆனால் முன்னர் வைத்தியர்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பன யாழ். வைத்தியசாலையை இயக்குவதற்கு எடுத்த நடவடிக்கையை அரசாங்கம் தட்டிக்கழித்தது குறிப்பிடத்தக்கது.

மேலும் பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசும்போது அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினர் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியை மீண்டும் திறக்கும் முகமாககோட்டைப் பகுதியைப் பொறுப்பேற்கத் தயாராக உள்ளனர் எனவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மக்களை வெளியேற்றும் திட்டம் பற்றி பத்திரிகையாளர் கேட்ட கேள்விக்கு பாதுகாப்புப்படையினரின் தடைகளை அகற்றும் வேலைகள் வெற்றிகரமாக நடைபெற்றால் வெளியேற்றும் நடவடிக்கை தேவையில்லை எனவும் தெரிவித்தார்.

### பாதுகாப்பு

தூரத்தில் நிறுத்தும்படி கப்பல் கப்டனுக்கு ராணுவத்தினர் கட்டளைவிடுத்தனர். ஆனால் அவ்வாறு நிறுத்துவது கப்பலுக்குப் பாதுகாப்பானதாக இருக்காது என்று கூறிய கப்டன் கப்பலை மீண்டும் கொழும்பிற்குத் திருப்பிச் சென்றார். (ம)

### சிறிலங்கா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய நகர் வளர்ச்சித் திட்ட அமைச்சர் முரசொலி மாறன் தலைமையில் தி. மு. கழக நாடாளுமன்ற உறுப்பினர் குழு பிரதமர் வி. பி. சிங்கை சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக எடுத்துக்கூறியது.

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதியில் சிறிலங்கா போர் விமானங்கள் குண்டு வீசித் தமிழர்களைக் கொன்று குவிப்பது பற்றியும், தமிழ் நாட்டுக்கு வரும் இலங்கைத் தமிழ் அகதிகளின் தொகை பற்றியும் முரசொலிமாறன் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக சிறிலங்கா அரசுடன் மத்திய வெளியுறவு இலாகா அதிகாரிகள் மூலம் தாம் நடவடிக்கை எடுத்து வருவதாகப் பிரதமர் சிங் தூதுக்குழுவிடம் தெரிவித்தார்.

### சென்னையில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசு குண்டுவீசித் தமிழ் மக்களை அழிப்பதை உடன் நிறுத்தவேண்டுமென்றும் இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உணவு, உடை மற்றும் அத்தியாவசியப் பொருட்களையும் இந்தியா வழங்க வேண்டுமென்றும் இந்தியாவுக்கு வரக்காத்திருக்கும் தமிழர்களை ஏற்றி வருவதற்கு இந்தியா கப்பல் அனுப்ப வேண்டுமென்றும் நேற்று சென்னையில் இலங்கைத் தமிழர் பிரதிநிதிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதமிருந்தனர்.

### புலிக்கொடி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தினம் இடம் பெற்றது.

அதேதினத்தன்று கண்டி வீதியில் முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலிலும் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

### வீரவணக்கங்கள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

(தனேஸ்வரன் நீர்வேலி வடக்கு நீர்வேலி) ஆகியோர் வீரமரணமடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

அரசபடைகளின் (1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## ஆறுகால்மடத்தில் இருவர் பலி

ஆறுகால் மடத்தடியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த கணவன், மனைவியாகிய டேவிட், கனகு ஆகிய இருவர் கொல்லப்பட்டனர். மாடு ஒன்றும் பலியானது. சிற்றம்பலம் என்பவர் சிறுகாயத்திற்கு உள்ளானார்.

## சாப்பிட்டுக் கொண்டிருந்த சிறுவன் பலி; மூவர் காயம்

கன்னாதிட்டிகாளிகோவிலடியில் உள்ள வீடு ஒன்றில் மதியபோசனம் அருந்திக்கொண்டிருந்தபோது வீட்டின்மீது மேற்கொள்ளப்பட்ட ஹெலித் தாக்குதலினால் ராஜ்குமார் (3) என்பவர் கொல்லப்பட்டார். இவரது குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர் தனுஸ்குமார் (5), தாயார் சகலகலாதேவி (35), புஸ்பவதி(60) ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

## ஹெலிசூட்டிற்குக் குழந்தை பலி

கொழும்பிலிருந்துயாழ்ப்பாணம் நோக்கிமினிபஸ்சில்வந்துகொண்டிருந்தவர்கள்மீது சாவகச்சேரிக்கு அண்மையில் வைத்து ஹெலித்தாக்குதல் மேற்கொண்டதில் திருமதி ரட்ணகலாவின் குழந்தை ஒன்று இறந்துள்ளது. ரட்ணகலா என்பவரும், கொழும்புத்துறையைச் சேர்ந்த முத்துராஜா (35) என்பவரும் படுகாயமடைந்தனர். மேலும் பத்துப்பேர் சிறுகாயங்களுக்கு உள்ளானார்கள்.

## மிருசுவிலில் நால்வர் மரணம்

மிருசுவில் வைத்தியசாலை முன்பாக சென்று கொண்டிருந்த லொறி ஒன்றின்மீது மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலினால் ஒரு பெண் ஒரு குழந்தை உட்பட நாலு பேர் பலியானார்கள். லொறியின் பின்பகுதியும் சேதமடைந்துள்ளது. மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

## கேரதீவில் 38பேர் காயம்

கேரதீவு இறங்குதுறையில் ஹெலி மேற்கொண்ட தாக்குதலினால் 38 பயணிகள் காயமடைந்தனர். இதில் சிலர்இறந்ததாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## நாவற்குழியில் ஒருவர் மரணம்

நாவற்குழியில் இடம்பெற்ற விமானப்படைத் தாக்குதலினால் ஒருவர் கொல்லப்பட்டார். ஐவர் படுகாயமடைந்தனர்.

## காங்கேசனில் மோதல் சேனாதி வீரமரணம்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை முகாமில் இருந்து நேற்று முன் தினம் காலை வெளியேற முற்பட்ட இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும்சண்டை இடம்பெற்றது. இச்சண்டையைத் தொடர்ந்து இராணுவம் பலத்த இழப்புக்களுடன் முகாமிற்குத் திரும்பியது.

இச்சண்டையில் இளம்புலி சேனாதி (செல்லக்கண்டு ரேகச்சந்திரன், சிறுப்பிட்டி) வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமதுவீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

### மந்திகை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்திக்கொண்டு கொழும்பு சென்றது.

இக்குழு செல்லும் போது அப்பகுதி மக்கள் இக்குழுவை செல்ல விடாமல் மறியல் போராட்டம் நடத்தினர். இதன் போது இக்குழுவினர் தாம் எப்படியும் இவ்வைத்திய சாலையில் சேவை புரிய திரும்பி வருவதாக கூறிச் சென்றனர்.

இதனையடுத்து இவ்வைத்திய சாலையில் சேவை புரிவதற்கென புதிய பிரஞ்சு டாக்டர்கள் கொண்ட குழு ஒன்று எதிர்வரும் திங்கட்கிழமையளவில் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அதிகாரப் பரவல் பற்றி விவாதம்

(கொழும்பு)

அனைத்துக்கட்சி மாநாடு நேற்று ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தலைமையில் மீண்டும் கூடியபோது அதிகாரப் பரவலாக்கல் பற்றித் தொடர்ந்து விவாதிக்கப்பட்டதாக அரச அறிக்கை ஒன்று கூறியது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31- ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.